No. of Printed Pages : **8**

**9063**

| பதிவு எண் Register Number | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# PART - III

# உயிர் வேதியியல் / BIO-CHEMISTRY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

(3) தேவையான இடத்தில் வரைபடம் மற்றும் சமன்பாடுகளைத் தருக.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

(3) Draw diagrams and write equations wherever necessary.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. கிளாத்ரின் பூசப்பட்ட குழிகள் __________ உதவி புரிகின்றன.

(அ) உயிரணு விழுங்குதலில்

(ஆ) உணர்வேற்பி வழி உயிரணு உட்கவர்தலில்

(இ) ஊடுருவுதலில்

(ஈ) உயிரணு வெளியேற்றத்தில்

Clathrin coated pits assist in __________.

(a) phagocytosis

(b) receptor-mediated endocytosis

(c) diffusion

(d) exocytosis

2. உணவை பிடித்துக் கொள்ளவும், கிழிக்கவும் பயன்படும் பற்கள் __________.

(அ) முன்கடைவாய்ப் பற்கள் (ஆ) வெட்டும் பற்கள்

(இ) பின்கடைவாய்ப் பற்கள் (ஈ) கோரைப் பற்கள்

__________ teeth are responsible for holding and tearing food.

(a) Premolar (b) Incisors

(c) Molar (d) Canine

3. கோலிசிஸ்டோகினின் எனும் ஹார்மோனை சுரப்பது __________.

(அ) முன் சிறு குடலிலுள்ள I செல்கள்

(ஆ) இரைப்பை குழிகளிலுள்ள G செல்கள்

(இ) முன் சிறு குடலிலுள்ள C செல்கள்

(ஈ) முன் சிறு குடலிலுள்ள S செல்கள்

Cholecystokinin is a hormone secreted by the __________.

(a) I cells of duodenum

(b) G cells of gastric pits

(c) C cells of duodenum

(d) S cells of duodenum

4. இன்சுலின் __________ ஆல் சுரக்கப்படுகிறது.

(அ) கணையம் (ஆ) கல்லீரல் (இ) தைராய்டு (ஈ) சிறுநீரகம்

Insulin is secreted by __________.

(a) Pancreas (b) Liver (c) Thyroid (d) Kidney

5. டோபமைனுக்கு __________ வினை முன் பொருளாகும்.

(அ) தைரோசின் (ஆ) டிரிப்டோபேன்

(இ) புரோலின் (ஈ) ஹைட்ராக்ஸிபுரோலின்

__________ serves as a precursor for dopamine.

(a) Tyrosine (b) Tryptophan

(c) Proline (d) Hydroxyproline

6. இரத்த கொலஸ்டிராலின் இயல்பான அளவு :

(அ) 500 mg/dL (ஆ) < 200 mg/dL (இ) 400 mg/dL (ஈ) > 200 mg/dL

Normal value of blood cholesterol is :

(a) 500 mg/dL (b) < 200 mg/dL (c) 400 mg/dL (d) > 200 mg/dL

7. மரபுத்தகவல் மொழிபெயர்த்தலில் ஈடுபடும் சைட்டோபிளாச செல் உள்ளுறுப்பு __________.

(அ) மைட்டோகாண்டிரியா (ஆ) லைசோசோம்

(இ) உட்கரு (ஈ) ரிபோசோம்

The cytoplasmic cellular organelle involved in translation process is _________.

(a) Mitochondria (b) Lysosome

(c) Nucleus (d) Ribosome

8. ஹோமோஜெனிடிசேட் அமில ஆக்சிடேஸ் குறைபாட்டால் உருவாவது :

(அ) தைரோசினிமியா (ஆ) பீனைல்கீட்டோனூரியா

(இ) காலக்டோசீமியா (ஈ) அல்காப்டோனூரியா

Deficiency in homogentisate acid oxidase causes :

(a) Tyrosinemia (b) Phenylketonuria

(c) Galactosemia (d) Alkaptonuria

9. இரத்த உறைதல் காரணி IV என்பது :

(அ) கிருத்துமஸ் காரணி (ஆ) பைபிரினோஜன்

(இ) ஹகீமன் காரணி (ஈ) கால்சியம் அயனிகள்

Blood clotting factor IV is :

(a) Christmas factor (b) Fibrinogen

(c) Hageman factor (d) Calcium ions

10. எந்த அணைவு புரோட்டான் இறைப்பியாக செயல்படாது ?

(அ) சைட்டோகுரோம் ரிடக்டேஸ் அணைவு III

(ஆ) NADH டிஹைட்ரஜனேஸ் அணைவு I

(இ) சைட்டோகுரோம் ஆக்ஸிடேஸ் அணைவு IV

(ஈ) சக்சினேட் டிஹைட்ரஜனேஸ் அணைவு II

Which complex does not pump protons ?

(a) Cytochrome reductase complex III

(b) NADH dehydrogenase complex I

(c) Cytochrome oxidase complex IV

(d) Succinate dehydrogenase complex II

11. எலக்ட்ரான் ஏற்பை __________ என பெயரிட முடியும்.

(அ) ஆக்சிஜனேற்றம் (ஆ) வளர்சிதை மாற்றம்

(இ) ஒடுக்கம் (ஈ) வளர்மாற்றம்

Gain of electrons can be termed as :

(a) Oxidation (b) Metabolism

(c) Reduction (d) Anabolism

12. ES அணைவு உருவாதல் ஒரு :

(அ) ஆற்றல் உறிஞ்சும் வினை (ஆ) மீள் வினை

(இ) முழுமையான வினை (ஈ) மீளா வினை

ES complex formation is :

(a) an energy consuming reaction (b) a reversible reaction

(c) a complete reaction (d) an irreversible reaction

**13.** தூண்டப்பட்ட பொருந்துதல் மாதிரியை உருவாக்கியவர் :

(அ) கோஷ்லேண்ட் (ஆ) டிக்சான்

(இ) மைக்கலிஸ் மென்டன் (ஈ) பிஷ்ஷர்

Induced fit model was proposed by :

(a) Koshland (b) Dixon

(c) Michaelis Menten (d) Fischer

**14.** கீழ்க்கண்டவற்றில் எது சூப்பர் ஆன்டிஜென் ?

(அ) டாக்ஸாய்டு (ஆ) ஆட்டோஜன் (இ) ஹேப்டேன் (ஈ) TSST-1

Which one of the following is a super antigen ?

(a) Toxoid (b) Autogen (c) Hapten (d) TSST-1

**15.** IgM ஆன்டிபாடியில் உள்ள ஆன்டிஜென் இணையும் பகுதிகளின் எண்ணிக்கை :

(அ) 9 (ஆ) 7 (இ) 10 (ஈ) 8

Number of antigen binding sites in IgM antibody are :

(a) 9 (b) 7 (c) 10 (d) 8

## பகுதி - II / PART - II

குறிப்பு : **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24 -க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question No. **24** is **compulsory**.

**16.** சவ்வு என்றால் என்ன ?
What is a membrane ?

**17.** கூட்டு நுண் கொழுப்பு பொருள் எவ்வாறு உருவாகிறது ?
How are mixed micelles formed ?

**18.** TCA சுழற்சியில் நுழையும் கார்பன் பின்புலத்தைப் பெற்றுள்ள ஏதேனும் நான்கு அமினோ அமிலங்களின் பெயர்களைத் தருக.
Mention any four amino acids whose carbon skeletons enter into TCA cycle.

**19.** கொலஸ்ட்ராலின் முக்கியமான பெறுதிகள் யாவை ?
What are the important derivatives of cholesterol ?

20. GM1 ஆனது எவ்வாறு GM2 ஆக மாற்றப்படுகிறது ?
How GM1 is converted into GM2 ?

21. மைட்டோகாண்டிரியாவின் அமைப்பை வரைக.
Draw the structure of mitochondria.

22. பூட்டு சாவி மாதிரியின்படி, கிளர்வு மையத்தின் தன்மை யாது ?
What is the nature of active site according to lock and key theory ?

23. எபிடோப் வரையறுக்கவும்.
Define epitope.

24. குளுக்கோநியோஜெனிசிஸ் என்றால் என்ன ?
What is Gluconeogenesis ?

## பகுதி - III / PART - III

**குறிப்பு : ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question No. **33** is **compulsory**.

25. எலக்ட்ரான் கடத்து சங்கிலியின் அணைவு-I பற்றி எழுதுக.
Write about complex-I of Electron Transport Chain.

26. GTT பற்றி சிறு குறிப்பு எழுதுக.
Write short notes on GTT.

27. அம்மோனியா நச்சாதல் என்றால் என்ன ? அதன் அறிகுறிகளை தருக.
What is ammonia intoxication ? Give its symptoms.

28. ஆத்திரோஸ்கிளிரோசிஸ் பற்றி எழுதுக.
Write about atherosclerosis.

29. அமினோ அமிலங்கள் உறிஞ்சப்படுதலை பாதிக்கும் ஏதேனும் மூன்று காரணிகளை எழுதுக.
Write any three factors that affect absorption of amino acids.

**30.** DNA இரட்டிப்படைதலின் மூன்று வெவ்வேறு மாதிரிகளின் பெயர்களை எழுதுக.
Write the names of three different models of DNA replication.

**31.** மூன்று வைரஸ் நோய்களை அவற்றிற்கான சிகிச்சை முறையுடன் பட்டியலிடுக.
List out three viral diseases with treatment.

**32.** கேலக்டோசின் வளர்சிதை மாற்றத்தை தருக.
Give the metabolism of galactose.

**33.** செல் சவ்வின் திரவத் தன்மையை பாதிக்கும் காரணிகளை எழுதுக.
Write the factors that influence the fluidity of a cell membrane.

## பகுதி – IV / PART - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். தேவையான இடங்களில் படம் வரைக. **5x5=25**

**Note :** Answer **all** the questions. Draw the diagrams wherever necessary.

**34.** (அ) ஹீமோகுளோபின் தாங்கல் கரைசல் அமைப்பு பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) லைன்வீவர் பர்க் வரைபடம் எவ்வாறு பெறப்படுகிறது என்பதை விளக்குக.

(a) Explain about the haemoglobin buffer system.

**OR**

(b) How is the Line Weaver Burk plot arrived ? Explain.

**35.** (அ) யூரியா சுழற்சி மற்றும் அதன் முக்கியத்துவத்தை விரிவாக விளக்குக.

**அல்லது**

(ஆ) ஹீமோபிலியா நோயின் காரணம் மற்றும் அறிகுறிகளை விளக்குக.

(a) Elaborate on Urea Cycle and its significance.

**OR**

(b) Explain the causes and symptoms of Haemophilia.

36. (அ) வெவ்வேறு வகையான உடற்காப்பு மூலங்களை ஒரு அட்டவணையில் வேறுபடுத்துக.

**அல்லது**

(ஆ) உயர் ஆற்றல் பாஸ்பேட் பிணைப்புகள் பற்றி விளக்குக.

(a) Differentiate different types of antibodies with a neat table.

**OR**

(b) Explain about high energy phosphate bonds.

37. (அ) இரைப்பைக் குடல் ஹார்மோன்கள் பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) கிளைக்கோஜெனிசிஸை பற்றி விளக்குக.

(a) Explain about Gastrointestinal hormones.

**OR**

(b) Explain about Glycogenesis.

38. (அ) DNA இரட்டிப்படைதல் செயல்முறையில் DNA பாலிமரேஸ் நொதியின் பங்கை விளக்குக.

**அல்லது**

(ஆ) கொலஸ்டிரால் உயிர்தொகுத்தலோடு தொடர்புடைய பல்வேறு படிநிலைகளை சுருக்கமாக விளக்குக.

(a) Explain the role of DNA polymerase in DNA replication.

**OR**

(b) Briefly explain about the various steps involved in cholesterol biosynthesis.

-o0o-